DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
OS NO.10/2014
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : கே.ஏ.அய்யண தேவர் என்ற கே.ஏ. பாண்டியன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 30.01.1991 – 2ம் பிரதிவாதி வகையறாவிடமிருந்து நல்லச்சாமி நாயக்கர் பெற்ற பதிவு பொது அதிகார ஆவணம் **வா.சா.ஆ.1** ஆகும். 25.03.1991 வாதி பெற்ற பதிவுக்கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். பிராதின் தபசில் சொத்துக்குரிய கணிணி பட்டா எண்.2500 **வா.சா.ஆ.3** ஆகும். எனவே வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கிய வீட்டு மனையை குறித்து பரிகாரம் கேட்டுள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் விபரம் சொன்னேன். இந்த சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மால்கள் சரியானது தான். நான் சர்வே எண்.526/8ல் 1 ஏக்கர் 30 செண்டு 528/1ல் 2 ஏக்கர் 65 செண்டு ஆக மொத்தம் 3 ஏக்கர் 95 செண்டு நிலத்தில் ராமசாமி நகரில் பிளாட் எண்.59ஐ நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கீழ்புறம் மாலாக பிளாட் எண் 60 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் பத்தி 4ல் தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் சொத்திற்கு மேல்புறம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே பத்தியில் தபசில் சொத்தின் கீழ்புறத்தில் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்கு மாலில் கீழ்புறம் பிளாட் எண்.60 உள்ளதாக சொல்லியுள்ளேன் எனவே நான் வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் சொத்து கீழ்புறம் உள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் பிளாட் எண்.59க்கு கிழக்கே பிளாட் எண். 60 உள்ளது அதற்கு கிழக்கே 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. நான் கிரையம் பெற்றுள்ள பிளாட் அரசிடம் அங்கிகாரம் பெறப்படாத லேஅவுட் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.3 ல் இரண்டு புல எண்களில் உள்ள 90.5 ஏர்ஸ்க்கும் சேர்த்து எனக்கும் மற்றும் நான்கு பேருக்கும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் 29.05.1998 ல் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது பிளாட்டிற்கு தனியாக பட்டா பெறவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடைய பிளாட்டினை 2013 செப்டம்பர் மாதத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளதை பொறுத்து நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதாக கூறி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்து ஆணையர் அறிக்கை மற்றும் புலப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். புலப்படத்துடன் கூடிய ஆணையர் அறிக்கை நீதிமன்ற சான்றாவனம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது கிழக்கே 1ம் பிரதிவாதியின் இடத்தில் இருந்து தான் அளந்து வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது சர்வே எண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 செண்ட் நிலம் முழுவதும் ஒரே காலியிடமாக தான் இருந்தது என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது பிளாட்டுகளை காட்டக் கூடிய எல்லை கற்கள் இல்லாமல் இருந்தது என்று சொன்னால் எனது பிளாட்டுக்கு இல்லை எனது பிளாட்டுக்கு மேற்கே உள்ள பிளாட்டுகளுக்கு எல்லை கற்கள் இருந்தது. நான் சொல்வது போல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது எந்த பிளாட்டுக்கும் எல்லை கற்கல் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்துக்கள் மனை சொத்துக்களாக பிரிக்கப்பட்டதற்கு வருவாய் துறை ஆவணங்களில் பதிவுகள் இல்லை என்றும் அதனால் வழக்கு சொத்தினை மனுவில் கண்ட விபரப்படி அளந்து காண்பிக்க இயலவில்லை என அளவையர் தெரிவித்ததாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆணையர் சொத்தை பார்வையிட்ட போது வழக்கு சொத்தை காட்டக்கூடிய வரைபடம் ஏதும் ஆணையரிடம் காண்பித்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை காட்டக்கூடிய வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடம் போது அடையாளம் கண்டு அளந்து காட்ட இயலவில்லை என்று தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மீண்டும் மாவட்ட அளவையர் மூலம் சொத்தை அளக்க வேண்டும் என ஆணையர் மறு நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின் நான் உயர்நீதிமன்ற கிளையில் சீராய்வு மனு எண்.1705/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவும் மதுரை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான். அதன் பின்னர் தாவா சொத்தை பிரித்து தர வேண்டும் என பரிகாரத்தை திருத்தும் பொருட்டு சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவை பின்னர் திரும்ப பெற்றுவிட்டேன் என்றாலும் சரிதான். அதன் பின்னர் 1ம் பிரதிவாதியின் சொத்தினையும் சேர்த்து அளக்க வேண்டும் என ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாங்கியுள்ள பிளாட்டானது கிழமேல் 30 அடி தென்வடல் 56 அடி அளவுள்ளது என்றால் சரிதான். அதன் கீழ் புறம் உள்ள பிளாட் எண் 60ம் அதே அளவு உள்ளது தான். மற்ற பிளாட்டுகளும் அதே அளவுதான் உள்ளது. எனக்கு பவர் ஏஜண்ட் நல்லசாமி கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தில் சர்வேஎண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 நிலத்தை பொறுத்து பவர் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பவர் ஏஜண்ட் நல்லசாமி தான் சொத்துக்களை பல பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்பது பற்றி எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி புல எண்.528/2 ஏயில் உள்ள 2 ஏக்கர் 22 செண்டு நிலத்தில் கீழ் கடைசியில் உள்ள 95 செண்ட் நிலத்தினை அப்பாசாமி பிள்ளை குமாரர் இராஜரத்தினம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மொத்தமாக மாட்டு வியாபரம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி அவரது சொத்தில் மாட்டு தீவனமாக சோளநாற்று பயிர் செய்து வருகிறார் என்றார் சரிதான். அந்த இடத்திற்கு தண்ணீர் பாசணம் கிடையாது. மானாவாரியாக பயிர் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு வடபுறம் ஸ்பின்னிங் மில் உள்ளது என்றால் சரிதான். அது மில் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. அது சர்வே எண். 528/1 ல் ஒரு பகுதியாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிளாட்டின் முந்தைய பாத்தியஸ்தரான குருசாமி நாயக்கரின் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தானது ஆதியில் முப்பிடாதி செட்டியார் மனைவி மணியம்மாள் என்பவர் 27.10.1992 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மணியம்மாளிடம் இருந்து அப்பாசாமிபிள்ளை குமாரர் இராஜரத்தினம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி இராஜரத்தினத்திடம் இருந்து 1ம் பிரதிவாதி அவருடைய சொத்தினை கிரையம் பெற்றுள்ளார்.

1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு தனியாக உட்பிரிவு ஏற்பட்டு சர்வே எண்.528/15 என உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் மேல்புறத்தில் வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் வாங்கிய பிளாட் எண்.59 எங்கு அமைந்துள்ளது என்று தெரியாமலேயே 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சொத்தை எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.